<u>சுருக்கம்</u>

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – பத்து வருடங்களுக்கு முன்பு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machine) பெற்று, அவ்வுபகரணங்கள் பழுதடைந்திருப்பின் அதற்காக விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு மீண்டும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.2)த் துறை</u>

அரசாணை (நிலை) எண். 3 நாள்: 11.06.2025

விசுவாவசு, வைகாசி–28 ,

திருவள்ளுவர் ஆண்டு, 2056,

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.153, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.4) துறை, நாள் 25.11.2009.
2. அரசாணை (நிலை) எண்.38, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 12.07.2010.
3. அரசாணை (ப) எண்.20, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2) த்துறை, நாள் 13.03.2018.
4. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த்துறை, நாள் 04.05.2018.
5. அரசாணை (நிலை) எண்.12, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை, நாள்.27.05.2022.
6. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.1460/உ.உ.பிரிவு.2025, நாள்.12.05.2025.

******

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஊனமுற்றோர் சுயதொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு 2009–2010–ஆம் ஆண்டு, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும், 1350 உடல் ஊனமுற்ற நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.55,35,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் வழங்கிட ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைத் தளர்த்தி பின்வரும் தகுதிகள் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(i) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் மாற்றுத்திறனாளிகள்.

(ii) கல்வித் தகுதி இல்லை.

(iii) வயது வரம்பு 18 முதல் 45 வரை

(iv) அரசு / அரசு உதவி பெறும் நிறுவனங்களில் சான்று அல்லது தனியார் நிறுவனங்களில் தையல் தெரியும் எனச் சான்று இருந்தால் போதுமானது.

(v) வருமான வரம்பு இல்லை.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத்திறனாளிகள் தொழில்புரிய உதவும் வகையில் அவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்ட திட்டத்தின் கீழ் கூடுதல் மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் முதற்கட்டமாக மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள், 75% க்கு மேல் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தாய்மார்களும் வருமானம் ஈட்டும் வகையில் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி, செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பயனாளிகளுடன் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மற்றும் 75%க்கு மேல் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தாய்மார்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2018-2019-ஆம் நிதியாண்டு முதல், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் சுமார் 52 நலத்திட்டங்களை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப்பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் பத்தி 2 (ii) (1)-ல் மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் கை, கால் பாதிக்கப்பட்ட, காது கேளாத மாற்றுத்திறனாளிகளுடன் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் மற்றும் 75%-க்கு மேல் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் குழந்தைகளின் தாய்மார்களுக்கு இலவச மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் கூடுதல் பயனாளிகள் பயன் பெறுவதற்கு ஏதுவாக இத்திட்டத்தில் பயன்பெற ஏற்கெனவே விதிக்கப்பட்ட வயது வரம்பான 18-45 வயது இருக்க வேண்டும் என்பதை 18-60 வயதாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது 16.04.2025 அன்று இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> **"பத்து வருடங்களுக்கு முன்னர் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machine) பெற்ற பயனாளிகளுக்கு மீண்டும் புதிய மோட்டர் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்."**

7. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், 2009–2010 ஆம் நிதியாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இயக்க மாற்றுத்திறனாளிகள், செவித்திறன் மாற்றுத்திறனாளிகள், மிதமான அறிவுசார் மாற்றத்திறனாளிகள் மற்றும் 75 சதவீதத்திற்கு மேல் அறிவுசார் குறையாடுடைய மாற்றுத்திறனாளிகளின் தாய்மார்களுக்கும், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக மாற்றுத்திறனாளிகள் 10 ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அவர்கள் புது இயந்திரங்களுக்காக விண்ணப்பிக்கும் பட்சத்தில் புதிதாக வழங்க ஏதுவாக, ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கையில், 25 சதவீதம், பழைய தையல் இயந்திரங்களுக்கு பதிலாக புதிய மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்க அனுமதித்து அரசாணை வழங்குமாறு கோரியுள்ளார். மேலும் இவ்வுபகரணங்கள் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள்ளாக கொள்முதல் செய்யப்படவுள்ளதால், இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு ஏதும் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளர்.

8. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று மாற்றுத்திறனாளிகள் பத்து ஆண்டுகளுக்கு முன்பு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் பெற்று அவ்வுபகரணங்கள் தற்போது பழுதடைந்திருப்பின், அதற்காக மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பழுதடைந்த உபகரணத்திற்கு மாற்றாக, புதிய மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கிட ஏதுவாக, ஒவ்வொரு வருடமும் கொள்முதல் செய்யப்பட்டு மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கையில், 25 சதவீத அளவிலான ஒதுக்கீட்டிற்குள் பழுதடைந்த மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களுக்கு பதிலாக புதிய உபகரணங்கள் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள்ளாக வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

9. மேலும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றிட கீழே தெரிவிக்கப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என நிபந்தனைகளின் அடிப்படையில், பயனாளிகளை தேர்வு செய்திடுமாறு மாற்றுத்திறனாளிகள் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(i) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை (NIDC) அல்லது UDID அட்டை.

(ii) வயது வரம்பு 18 முதல் 60 வரை உள்ளவர்கள்.

(iii) அரசு / அரசு உதவி பெறும் நிறுவனங்களில் சான்று அல்லது தனியார் நிறுவனங்களில் தையல் கற்றவர் எனச் சான்று இருக்க வேண்டும்.

(iv) தேர்வு குழுவின் முன் தைத்து காட்ட வேண்டும்.

(v) கல்வித் தகுதி / வருமான வரம்பு தேவை இல்லை.

(vi) பயனாளிகளின் பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

(vii) ஏற்கனவே பெற்ற மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், பழுதாகி உபயோகிக்க இயலாத நிலையில் இருப்பதை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

(viii) மாவட்ட ஆட்சித் தலைவரால் மாவட்ட அளவிலான தெரிவுக்குழு மூலம் பரிந்துரைக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்படும் பயனாளிகளுக்கு மட்டும் இத்திட்டம் பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.மதுமதி
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
அனைத்து மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்.
நிதி (ச.ந/வ.செ.பொது–I&II/வ.வ–I)த் துறை, சென்னை–9.
சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை சென்னை–9.
அரசு செயலாளரின் தனிச் செயலர் சென்னை–9,
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

11-06-2024